# மிருகத்தின் முத்திரை

# 2

(இது தீர்க்கதரிசி பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து, ‘**மிருகத்தின் முத்திரை**’ என்ற தலைப்பில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிய, கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளை முழுமையாக வாசிக்கவும்.)



**சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து**

# மிருகத்தின் முத்திரை

~~~~~~~~~~~~~~~~~~~~

(இது தீர்க்கதரிசி பிரன்ஹாம் பேசிய செய்திகளிலிருந்து, '**மிருகத்தின் முத்திரை**' என்ற தலைப்பில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிய, கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளை முழுமையாக வாசிக்கவும்.)

~~~~~~~~~~~~~~~~~~~~

233 நீங்கள், "மிருகத்தின் முத்திரையைக் குறித்து என்ன?" என்று ஒருக்கால் கேட்கலாம். பரிசுத்த ஆவியைப் புறக்கணித்தவர்கள் ஏற்கனவே மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொண்டுவிட்டனர். தண்டனை பின்பு வரும். புரிகிறதா?

**63-09-01M அடையாளம்**

~ ~ ~ ~ ~

66 உங்களுக்குத் தெரியுமா, ஒரு குடிமகன் என்னும் முறையில்... அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடிமகன் என்னும் முறையில், ஒரு குடிமகன் என்ற முறையில் என்னால் முடியாது, அதே சமயத்தில் நான் - நான்... நீங்கள் எனக்கு ஐந்து டாலர் களுக்கு ஒரு காசோலை வழங்கினால், நான் அதில் என் பெயரை எழுத துணிவு கொள்ள மாட்டேன். புரிகிறதா? பாருங் கள், என்னால் அதைச் செய்ய முடியாது. பாருங்கள், இது ஒரு இணையும் நேரமா யுள்ளது. இவை யாவும் ஏதோ ஒரு விதமான சங்கத்தினூடாகவே செல்ல வேண்டியதாயுள்ளது, அந்த சங்கமே மிருகத்தின் முத்திரையைக் கொண்டு வருகிறதாயுள்ளது. புரிகிறதா? இது ஒரு இணையும் நேரமாயுள்ளது, இது சரியாக அதற்குள்ளாகவே கிரியை செய்து கொண்

டிருக்கிறது, உங்களால் அதை உங்களு டைய வெளிப்படையான கண்களைக் கொண்டே பார்க்க முடியும், நீங்கள் அதை நோக்கிப் பார்த்தால் நலமாயிருக்கும். இது ஒரு இணையும் நேரமாய் உள்ளது, ஒவ்வொரு காரியமும் ஒன்றாக இணைந்து கொண்டிருக்கின்றன.

## 63-08-18 இணையும் நேரமும் அடையாளமும்

~ ~ ~ ~ ~

57 ஆகையால், அவர்கள் இப்பொழுது தங்களை இணைத்துக் கொண்டிருக்கிறார் கள், இங்குள்ள உங்கள் போதகரும், அதைக்குறித்து படித்துள்ள அநேகரும். உலக சபை சங்க ஐக்கியம் உருவாகிற தென்பதை உங்களிடம் எடுத்துரைக்க முடியும். அதற்கு லூத்தரன் போதகர் ஒருவர் தலைவராயிருக்கிறார். அதாவது ஒரு பேரிடர் உண்டானால், இங்கே இந்த சுற்றுப்புறத்தில் அது நிகழ்ந்தால், நாம்

உலக ஆலோசனை சபை சங்கத்தில் இணையமலிருந்தால், அப்பொழுது நம்முடைய சபை இனி சபையாயிராமல், அவர்கள் அதை ஒரு சேமிப்பு கிடங்காக உபயோகிப்பார்கள். யாரோ ஒருவர் மரிப்பதை அல்லது அடிப்பட்டு கிடப்பதை நம்முடைய சகோதரரில் ஒருவர் கண்டால், அப்பொழுது அவர் அந்த நபருக்கு எந்த ஆவிக்குரிய ஆசீர்வாதத்தையாவது அளிக்க முயன்றால், நாம் அதற்காக சுட்டுக் கொல்லப்படக்கூடும். அது முற்றிலும் உண்மை. அவ்வாறு ஏதாவது உதவி செய்வதற்காக நமக்கு பத்து ஆண்டுகள் பெரிய மத்திய சிறைச் சாலையில் சிறை தண்டனை விதிக்கப்படக் கூடும், ஏனென்றால் நாம் இந்த உலக ஆலோசனை சபை சங்க இயக்கத்தில் ஒரு உறுப்பினராயில்லதபடியால் அவ்வாறு நடக்கும். மிருகத்

தின் முத்திரையை உங்களால் காண முடிய வில்லையா? பார்த்தீர்களா? புரிகிறதா?

## 63-08-18 இணையும் நேரமும் அடையாளமும்

~ ~ ~ ~ ~

122. இன்றைக்கு அப். 2:38ஐ படிக்கிற வன் எவனும் நான் படிப்பதைக் காட்டிலும் அதை வித்தியாசமாகப் படிப்பதில்லை. ஆயினும் ஏனெனில், - ஏனெனில், அவர் களுடைய பிரமாணங்களால், ஏனெனில் அவர்கள் தங்கள் சட்டைப்பைகளில், பாக்கெட்டுகளில் கொண்டுள்ள தங்களு டைய ஸ்தாபன நுழைவுச் சீட்டுகளால், ஐக்கிய அட்டைகள் என்று தாங்கள் கொண் டிருக்கிற அந்த மிருகத்தின் முத்திரையால்; அதைப் போன்ற காரியங்களைக் கொண்டு அவர்கள் இயேசுகிறிஸ்துவை பொது ஜனங்களுக்கு முன்பாக மறுபடியும் சிலுவையில் அறைந்து, இதை செய்வதாக வாக்களித்துள்ள அதே தேவனின் பேரில்

தேவ தூஷணம் உரைத்து, அவர்களுடைய சந்ததியின் மேல் ஆக்கினையை வருவித்துக்கொள்கின்றனர்.

## 63-07-07M குற்றச்சாட்டு

~~~~~

269. ஆனால் இந்த சமயத்தில் - கர்த்தருக்கு மகிமை - நமது மத்தியில் நாம் கண்டுகொண்டிருக்கும் இந்த அக்கினி ஸ்தம்பம் நம்மை ஆயிரம் வருட அரசாட்சிக்கு வழி நடத்தும், இந்த யாத்தி ரைக்குப் பிறகு, அந்த மகத்தான ஆயிரம் வருட அரசாட்சிக்காக அவர் தமது ஜனங்களிடம் திரும்ப வருவார். அங்கு நாம் அவருடன் நித்திய காலமாய் வாழ்வோம். அவர் எப்பொழுதும் 'பிதாவின் வார்த்தையை' கொண்டிருக்கிறார். அது சரியென்று அவர் எக்காலத்தும் நிரூபித்து வருகின்றார்.
~~~~~

270. நாம் ஒரு யாத்திரையில் பிரவேசித்திருக்கின்றோம். இன்னும் சிறிது நேரத்தில், ஒலி நாடாக்கள் பதிவு செய்வதை நாம் நிறுத்திவிடப் போகின்றாம். என் நண்பர்களே, என் சகோதரரே இங்கு வந்திருப்பவர்களே, இந்த ஒலி நாடாவைக் கேட்பவர்களே உங்களுடைய சகோதரன் என்ற முறையிலும், தேவனுடைய ராஜ்யத்தின் குடிமகன் என்ற முறையிலும் இந்த யாத்திரைக்காக வெளியே வாருங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதில் கைவிடப்பட்டவர் அனைவரும் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்வார்கள். பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள்; இந்த குழப்பத்தைவிட்டு வெளியே வாருங்கள்; ஸ்தாபனங்களை விட்டு வெளியே வந்து, ஜீவனுள்ள தேவனை ஆராதியுங்கள். உடன்படிக்கையின் தூதனான இயேசு கிறிஸ்து, தேவ

னுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை. அவர் முதலாம் யாத்திரையின் போதும், இரண்டாம் யாத்திரையின் போதும் அக்கினி ஸ்தம்பமாக இருந்து அவைகளை வாய்க்கச் செய்தார். இப்பொழுதும் அவர் அதே அக்கினி ஸ்தம்ப ரூபத்தில் இருந்து கொண்டு, மூன்றாம் யாத்திரையில் பங்கு கொள்கிறார்.

## 63-06-30M மூன்றாம் யாத்திரை

~~~~~

150. எகிப்தில் ராமசேஸ் வளர்ந்து வந்தான். அவனுடைய ஆதிக்கமும் வளர்ந்து வந்தது. மாம்சப்பிரகாரமான ராம்சேஸ் வளர்ந்து வந்தான், அது போன்று மாம்சப் பிரகாரமான மனிதன், அந்திக் கிறிஸ்து, அரசியலின் மூலம் வளர்ந்து வருகிறான்.
~~~~~

அவன் ஏற்கனவே 'வெள்ளை மாளிகை யில்' நுழைந்து விட்டான்.

மார்க்க சம்பந்தமான விஷயங்களில் அவன் ஜனங்களை குழப்பியுள்ளதன் காரணத்தால், அவர்களனைவரும் அதை ஏற்றுக் கொள்வார்கள். தேசத்திலுள்ள ஒவ்வொரு ஸ்தாபனமும் சபைகளின் குழுவில் (Confederation of Churches) அங்கத்தினராகி விட்டது. ராமசேஸ் வளர்ந்து வருகிறான். அவர்களெல்லாரும் ஒன்று சேருகின்றனர். பின்பு அது என்ன செய்கின்றது? அது ஒரு ஆதிக்கத்தை பிறப்பிக்கின்றது - முதலாவது தோன்றின மிருகத் தைப்போல்.

151. இந்த ஐக்கியத்தில் சேராத அனைவரும் துன்புறுத்தப்படுவார்கள் - அவர்களைப் பகிஷ்காரம் செய்வார்கள். அப்பொழுது தாமதமாகியிருக்கும். ஏனெ னில் அதில் சேர்ந்தவர் அனைவரும்

மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள் கின்றனர் ''அப்பொழுது நான் வெளியே வருவேன்'' என்று சொல்ல வேண்டாம். அதை இப்பொழுதே செய்யுங்கள். ராம சேஸ் வளர்ந்து கொண்டிருந்தான்.

152. ராமசேஸ் எகிப்தில் ஆதிக்கத்தில் வளர்ந்துகொண்டு வந்த அதே சமயத்தில், கர்த்தர் மோசேயை வனாந்தரத்தில் வைத் திருந்தார். அவனும் வளர்ந்துகொண்டு வந் தான். ராமசேஸுக்கு அரசியல் ஆதிக்கம் இருந்தது. ஆனால் தேவன் மோசேயை ஆவிக்குரிய முறையில் வளர்த்து, அங் கிருந்து புறப்பட்டு வந்து இஸ்ரவேல் ஜனங்களுடன் பேசுவதற்காக அவனை ஆயத்தப்படுத்தினார். அவர்களிருவரும் ஒரே நேரத்தில் வளர்ந்து வந்தனர். ஒரு நாளில் இவ்விருவரிடையே பலப்பரீட்சை (Showdown) உண்டாகும். அது வெகு தூரத்திலில்லை.

## 63-06-30M மூன்றாம் யாத்திரை

~~~~~

112. அவள் வெளிப்படுத்தின விசேஷம் 13ம் அதிகாரத்தில் தோன்றுகிறாள் - பதின்மூன்று என்னும் எண் - அது ஆட்டுக் குட்டியாக எழும்பி வந்தது என்பதைக் கவனிக்கவும் - மத வழிபாட்டின் சுதந்தரம். ஆனால் பின்னர் அது மிருகத்தினிடமிருந்து வல்லமையைப் பெறுகின்றது – மிருகத்திற்கொப்பான ஒரு சொரூபத்தை உண்டாக்கவேண்டுமென்று கூறுகின்றது. அது சகல அதிகாரத்துடனும் பேசி, அதற்கு முன்பாக தோன்றின மிருகம் செய்த அதே அசுத்தமான கிரியைகளைச் செய்கிறது. அப்படியானால், இது இந்த தேசத்தைக் குறித்த தீர்க்கதரிசனம் அல்லவென்று என்னிடம் கூறுங்கள் பார்க்கலாம்
~~~~~

எமோரியரின் நிலைமை முதிர்வடையும் சமயம் வந்து விட்டது. ஏனெனில் அவர்கள் அதற்கென்று கிரியை நடப்பித்து வருகின்றனர். இப்பொழுது புதிதாக நியமிக்கப்பட்ட போப்பாண்டவரும் கூட எல்லா சகோதரரையும் ஒருங்கே இணைக்க வேண்டுமெனும் நோக்கங்கொண்டவராயிருக்கிறார். இயற்கை கண்களுக்கு அது ஒரு நல்ல செயலாகத் தென்படலாம். ஆனால் தேவனுடைய பார்வையில் அது பரிசுத்த ஆவிக்கு முரணான ஒரு செயலாகும். அதனுடன் நாம் கலந்துவிடக் கூடாது. ஒவ்வொரு சபையும் அந்த குழுவின் அங்கத்தினராக மாட்டிக் கொள்ளும்.

113. எவ்வளவு வேகமாக முடியுமோ, அவ்வளவு வேகமாக அதைவிட்டு வெளியே வாருங்கள். இல்லையேல் உங்களை அறியாமலேயே மிருகத்தின் முத்திரையை நீங்கள் தரிக்க நேரிடும்.

அதை விட்டு வெளியே வாருங்கள். ஆவிக்குரிய சிந்தை இதை கிரகித்துக் கொள்ளுமென்று நம்புகிறேன். அதை புரிந்து கொண்டீர்கள் என்னும் நிச்சயம் எனக்குண்டு. ஆனால் ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் இதை புரிந்து கொண்டார் களோ என்று ஐயமுறுகிறேன். ஒவ்வொரு நாட்டிற்கும் என்னால் போக முடியாது. ஒலி நாடாக்களைத்தான் நாம் அனுப்ப முடியும். இந்த விதை, அது விதைக்கப் பட்ட சிந்தையைக் கவர்ந்து கொள்ள தேவன் ஏதாவதொரு வழியை ஏற்படுத்த வேண்டும். வெளிச்சம் அதன் மேல் பட்டவுடனே அது உயிர்பெறுகின்றது. கிணற்றடியிலிருந்த ஸ்திரீக்கும் அதுவே சம்பவித்தது. "இதோ அது" அவள் உடனே அதை கிரகித்துக்கொண்டாள்.

114. அதை விட்டு வெளியே வாருங் கள். அது சபிக்கப்பட்டது விழுந்துபோன

ஏதாவதொரு ஸ்தாபனம் மீண்டும் எழும்பி னதை எனக்குக் காண்பியுங்கள். அவ் வாறே எழும்பி விழாத ஒரு ஸ்தாபனத்தை எனக்குக் காண்பியுங்கள். அவையாவும் தவறென்பதை அதனாலேயே நீங்கள் கண்டுகொள்ளலாம்.

115. எமோரியரின் அக்கிரமங்கள் நிறைவாகாததன் காரணத்தால் இஸ்ரவேல் பயணத்திற்காக காத்திருக்க வேண்டியதா யிருந்தது. எமோரியர் அக்கிரமங்கள் நிறை வானவுடனே, இஸ்ரவேலருக்கு ஆவிக் குரிய யாத்திரை அல்லது இயற்கையான யாத்திரை ஒன்றுண்டாகி, உலகப்பிரகார மான எமோரியர் தங்களுடைய தேசம் என்று அழைத்துக்கொண்ட அந்த இயற்கை நாட்டிற்கு இஸ்ரவேலர் நடத்திச் செல்லப் பட்டனர்.

116. அது போன்று, தங்களை சபை யென்று அழைத்துக்கொள்ளும் எமோரிய

ஸ்தாபனங்களில் அக்கிரமங்கள் நிறைவாகும் சமயம் வந்துவிட்டது. எனவே ஒரு யாத்திரை இப்பொழுது நேரிடவிருக்கிறது. அப்பொழுது யார் யார் யாரென்பதை தேவன் வெளிப்படுத்துவார். சபை இயேசு கிறிஸ்துவின் மணவாட்டி - அப்பொழுது அதனின்று வெளிவந்து வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குப் யாத்திரையாக கொண்டு செல்லப்படுவாள்... என் பிதாவின் வீட்டில் அனேக வாசஸ்தலங்கள் உண்டு.

**63-06-30M மூன்றாம் யாத்திரை**

~~~~~

59. ஏதோ ஒன்று. ஏதோ ஒரு விதமான சாக்கு போக்கு. அதிக உஷ்ணமாயுள்ளது. எனக்கு அதிக களைப்பாயுள்ளது. நாளை செய்கிறேன்'' போன்ற ஒருவிதமான சாக்கு போக்கு. அதை மாத்திரமே அவர்கள் செய்கின்றனர். தேவன் சந்திக்கும் நாளை நீ
~~~~~

புறக்கணிப்பதனால், அது உன்னை தேவனிடமிருந்து பிரித்து விடுகின்றது.

60. இப்பொழுது நாம் காண்கிறோம். பழைய ஏற்பாட்டின் காலத்தில் யூபிலி வருஷம் என்று ஒன்றிருந்தது. யூபிலி முழங்கும் போது, எல்லா அடிமைகளும் விடுதலை பெறலாம். ஆனால் அடிமை ஒருவன் விடுதலையாக மனமில்லாமல், தன் தேசத்திற்கு திரும்பி செல்ல விரும்பா மல், சாக்கு போக்கு ஏதாகிலும் கூறினால், அவன் ஆலயத்தின் கதவு நிலையின் அருகே கொண்டு செல்லப்பட்டு, அவனு டைய காது ஒரு கம்பியினால் குத்தப்பட்டு முத்தரிக்கப்படுகின்றது. அதன் பிறகு எத்தனை யூபிலி வருடங்கள் வந்தாலும், அந்த மனிதன் முழுவதுமாக விற்றுப் போடப்பட்ட காரணத்தால், அவன் இஸ்ர வேலின் குடிமகனாக ஒருக்காலும் திரும்பி வர முடியாது, அவன் என்ன செய்தான்?

அவனுக்கு கொடுக்கப்பட்ட அழைப்பை அவன் புறக்கணித்தான். அதற்கான கிரயத்தை அவன் செலுத்த வேண்டிய அவசியமில்லை. அவனுடைய அடிமைத்தனத்தின் கடன் செலுத்தப்பட்டுவிட்டது. அவனுடைய குடும்பம் சுயாதீன நிலையையடைந்தது. அவன் தன் சொந்த தேசத்துக்குச் சென்று, தன் உடைமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அவன் அப்படி செய்ய மறுத்தால், அவனுக்கு இஸ்ரவேலில் எவ்வித பங்குமில்லை. அவனுடைய உடைமைகள் வேறொருவனுக்கு அளிக்கப்படுகின்றன.

61. இந்த மாம்சத்துக்குரிய சம்பவம் ஆவிக்குரிய சம்பவத் துக்குப் பொருந்தும். நித்திய ஜீவனைச் சுதந்தரிக்க வேண்டியவர்களாகிய நாம் சுவிசேஷத்தைக் கேட்டு அது உண்மையென்று அறிந்தும், அதைப் புறக்கணித்து அதை ஏற்க மறுத்தால், நாம்

மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள் கிறோம்.

62. யாரோ ஒருவர், ''மிருகத்தின் முத்திரை ஒன்றுள்ளது, அது இனிமேல் தான் வரப்போகிறது'' என்று கூறினார். இதை நான் உங்களிடம் கூற விரும்பு கிறேன். அது ஏற்கனவே வந்து விட்டது. பரிசுத்த ஆவி விழுந்த அதே சமயத்தில், மிருகத்தின் முத்திரையும் போடத் தொடங் கப்பட்டு விட்டது. பாருங்கள்?

63. உங்களுக்கு இரண்டு காரியங்கள் மாத்திரமேயுள்ளன. ஒன்று, அதை ஏற்றுக் கொண்டு தேவனுடைய முத்திரையைத் தரித்துக்கொள்ளுதல், மற்றது அதை புறக் கணித்து மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுதல். தேவனுடைய முத்திரையை புறக்கணித்தல் என்பது மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள் ளுதலாம். எல்லோருக்கும் புரிகின்றதா?

(சபையார் ''ஆமென்'' என்கின்றனர் - ஆசி) தேவனுடைய முத்திரையைப் புறக் கணித்தால் மிருகத்தின் முத்திரையைத் தரிக்க வேண்டும். ஏனெனில் தேவனுடைய முத்திரையைப் பெறாதவர் அனைவரும் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக் கொண்டதாக வேதம் கூறுகின்றது.

64. எக்காளம் முழங்கினபோது, விடு தலையாக விரும்புகிறவர் அனைவரும் விடுதலையாகிச் செல்லலாம். அவர்கள் காதுகள் குத்தப்பட்டு முத்தரிக்கப்பட வேண்டிய அவசியமில்லை.

மிருகத்தின் முத்திரை என்பது இனி வரப்போகும் காலத்தில் சம்பவிக்க வேண் டிய ஒன்று என்று நாம் கூறுவோமானால், அது அப்பொழுது முழுவதும் வெளிப் படையாகும். ஆனால் அந்த நேரத்தில், நீங்கள் ஏற்கனவே அதை தரித்து கொண்டு விட்டீர்கள் என்பதை உணருவீர்கள்.

பாருங்கள்? பரிசுத்த ஆவியும் அதே விதமாகத்தான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மகிமையில் வரும்போது அது முழுவதும் வெளிப்படையாகும். அப்பொழுது மறுரூபமாக்கும் வல்லமையை நாம் உணர்ந்து, மரித்தோர் கல்லறையை விட்டு உயிரோடெழுவதை நாம் காண்போம். நாமும் கூட ஒரு நொடிப்பொழுதில் மறுரூபமாகி, அவருடையதைப் போன்ற ஒரு சரீரத்தை பெற்றுக் கொள்வோம். அப்பொழுது அது முழுவதும் வெளிப்படையாகும். அதை புறக்கணித்தவர் அனைவரும் அந்த நேரத்தில் கைவிடப்படுவார்கள்.

## 63-06-30E உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?

~~~~~

49. அதன் காரணமாகத் தான் இந்த தேசம். அவள் தண்டிக்கப்பட வேண்டிய
~~~~~

வள், அவளுக்கு நம்பிக்கை எதுவுமில்லை. அவள் இரக்கத்துக்கும் நியாயத்தீர்ப்புக்கும் இடையேயுள்ள கோட்டை கடந்துவிட்டாள். அவள் தேசத்தை ஆளுகை செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டாள். அவள் முழுவதும் அழுகிப் போனவளாயிருக்கிறாள். அவளுடைய அரசியல் அழுகி விட்டது. இந்த தேசத்தின் ஒழுக்கம் என்னால் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு தாழ்ந்த நிலையை அடைந்துள்ளது. இங்குள்ள மத சம்பந்தமான முறைமைகள், ஒழுக்கத்தைக் காட்டிலும் அதிகம் அழுகியுள்ளது. அப்படி இருப்பதனால், இந்த தேசத்திலுள்ள சபைகள் அனைத்துமே சபைகளின் சங்கத்தில் சேர்ந்து கொண்டு, மிருகத்தின் முத்திரையை தரித்துக் கொண்டுள்ளன. என்னே ஒரு காரியம்! ஏன்? ''என் விருந்துக்கு வாருங்கள்'' என்று கிறிஸ்து அவர்களுக்குத் தருணம் அளித்தார் -

பெந்தெகொஸ்தே விருந்துக்கு. பெந்தெ கொஸ்தே என்றால் ''ஐம்பது.''

## 63-06-30E உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?

~ ~ ~ ~ ~

270. இன்று சாயங்கால வெளிச்சம் பிரகாசித்துக் கெண்டிருக்கும் போது, புத்தி சுவாதீனமுள்ள எந்த மனிதனும் இது கடைசி நாள் என்று அறிந்திருக்கும் போது. எந்த வேத பண்டிதனும் இது கடைசி நாளென்று வேதத்தின் வாயிலாக அறிந் திருக்கிறான். அப்படியானால், இந்த கடைசி நாளில், நாம் இந்த பெரிய தடுப்பு சுவர்களை விட்டு விலகி, இயேசுகிறிஸ்து வின் நீதிக்குள் பிரவேசித்து, பிசாசு மிருகத்தின் முத்திரையை நமக்குத் தருவ தற்கு முன்பு, தேவனுடைய முத்திரையைத் தரித்துக் கொள்ளுதல் நமக்கு ஏற்றதா யிருக்கிறது. ஓ, என்னே!

## 63-06-30E உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?

~~~~~

68. தேவன் சந்திக்கும் நாளை புறக் கணித்தல் என்பது.... தேவன் சபைக்கும் ஜனங்களிடத்திலும் வரும் போது அதை உடனே ஏற்றுக் கொள்ளுங்கள். அதை அடுத்த ஆண்டு வரைக்கும், அல்லது அடுத்த எழுப்புதல் கூட்டம் வரைக்கும் தள்ளிப்போடாதீர்கள். அதுவே அந்த மணி நேரம். இப்பொழுதுதே இரட்சணிய நாள்''.

69. தேவன் தமது செய்தியை எந்த காலத்திலும் இயற்கைக்கு மேம்பட்ட அற்புதங்களினாலும் அடையாளங்களினா லும் உறுதிப்படுத்தாமல் அனுப்பின தில்லை. இயேசு, 'என் பிதாவின் கிரியை களை நான் செய்யாமற்போனால், என்னை விசுவாசியா தேயுங்கள். செய்தேனேயா கில், என்னை விசுவாசியாமல் போனா
~~~~~

லும், கிரியைகளையாவது விசுவாசியுங்கள்'' என்றார். அது மிகத் தெளிவாக வெளிப்படுவதை நீங்கள் காணும் போது ....

70. அவள் அதைப் புறக்கணிக்கும் நேரம் வந்த போது, அவளுடைய காது கம்பியினால் குத்தப்படுகின்றது. அதன் பிறகு அவளால் கேட்கவே முடியாது. அவள் சபைகளின் சங்கத்தில் சேர்ந்து கொள்கிறாள். அவள் மிருகத்தின் முத்திரையைத்தரிக்க, அது அவளைக் கொண்டு செல்கிறது.

71. புதிதாக வந்துள்ள போப்பாண்டவரின் மிகப்பெரிய விருப்பம் என்னவெனில் (இப்பொழுதுதான் இந்த செய்தித்தாளை ஒருவர் என்னிடம் கொடுத்தார்), எல்லா சபைகளையும் ஒன்றாக இணைப்பதே என்று அவரே கூறியுள்ளார். இங்கு நான் நின்று கொண்டிருப்பது எவ்வளவு

உறுதியோ, அவ்வளவு உறுதியாக அவர்கள் அதைச் செய்வார்கள். பிராடெஸ்டெண்டுகளும் அதில் சேர்ந்து கொள்வார்கள். ஏனெனில் சபையானது ... வேதம் கூறுகின்றது; கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய பவுல், ''விசுவாசத் துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது. அவன் தேவனுடைய ஆலயத்தில் உட்கார்ந்து கொண்டு, தேவனுக்கு மேலாக தன்னை உயர்த்தி பூமியில் பாவங்களை மன்னிப்பான்'' என்று கூறியுள்ளான். அது எப்படி நேரிட்டது? விசுவாசத்துரோகம் முந்தி நேரிட்டு, சபையானது ஆவிக்குரிய விருந்திலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு தன்னை ஸ்தாபித்துக்கொள்ளாமல் இது நடக்காது. அப்பொழுது சபையில் வெளிப்பாடு தங்கியிருக்காது.

## 63-06-30E உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?

~ ~ ~ ~ ~

87. “ஐயா இது என்ன சமயம்” என்று செய்தி அடங்கிய ஒலிநாடாவை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? அதில், நான், “ஏதோ ஒரு மகத்தானதொரு காரியம் சம்பவிக்கப்போகிறது, ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்” என்று கூறியுள்ளேன். இப்பொழுது அதைப்பற்றிமுழுத் தேசமும் சாட்சி பகரும்படி ஆகியிருக்கிறது. அசோசியேடட் பிரஸ் நிறுவனத்தின் ஒவ்வொரு செய்திப் பத்திரிக்கையும், மற்றுமுள்ள நமது முதன்மையான பத்திரிக்கைகளும் அதைப்பற்றி சாட்சி பகர்ந்து கொண்டிருக்கின்றன. இன்னும் எல்லாம் முடிவு பெறவில்லை. விஞ்ஞானத்தின்படி இனி விமோசனம் இல்லையென்றும், அணுகுண்டுகள் நமக்கென காத்துக்

கொண்டிருக்கின்றன என்றுள்ள இவ்வந்தகார வேளையில், கிறிஸ்தவரா யிருக்கும் மக்கள், இம்மகத்தான காரியங் களை அறிந்து கொள்வதற்கு எவ்வளவு சிலாக்கியம் பெற்றிருக்கிறார்கள்! ஒன்று சேர்ந்து கொண்டிருக்கும் நமது மதஸ் தாபனங்களிலும் நம்பிக்கையில்லை; அவைகள் மிருகத்தின் முத்திரையோடு ஒன்றித்துக் கொண்டிருக்கிறார்கள். நமது பொருளாதாரத் துறையிலும், மதஸ்தாப னங்களுக்கிடையே உள்ள கிறிஸ்தவ ஐக்கியத்திலும் நமது நம்பிக்கை போய் விட்ட நிலைமையில் நாம் இருக்கிறோம். கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் கத்தோலிக்க இயக்கத்திற்குள் சங்கமமாகி, சபைகளின் சமஷ்டியானது, இறுதியில் மிருகத்தின் முத்திரையாக ஆகிவிடும்.

**63-06-23M இடைவெளியில் நிற்றல்**

~~~~~
~~~~~

363. சபை எடுக்கப்படும்போது, சாத்தான் தாழத்தள்ளப்படுகிறான். சபை மேலே போகும்போது, சாத்தான் கீழே வருகிறான். பின்பு அவன் அந்திக்கிறிஸ்து வுக்குள் வாசம் செய்து "மிருகம்'' என்று அழைக்கப்படு கிறான். வெளி. 13-ல் அவன் மிருகத்தின் முத்திரையைப் போடு கிறான் பாருங்கள்?

364. ''தடை செய்கிற அவனால் மட்டுமே" (2 தெச. 2:7-சபை- தமிழாக் கியோன்) கிறிஸ்தவமானது தன் பரிசுத்தத் தில் இப்பொழுது பூமியின் மேல் விடப்பட் டுள்ளது.

365. ''தேவனுடைய ஆலயத்தில் அவன் உட்கார்ந்து தேவன் போல் தன்னைக் காண்பித்து, உலகில் மனிதரு டைய பாவங்களை மன்னிப்பான்'' என்று தெசலோனிக்கேயர் நிருபத்தில் கூறப்பட் டுள்ளதை நினைவில் கொள்ளுங்கள்.

அவன் வெளிப்படும் சமயம் வரும்வரை இது தொடர்ச்சியாக நடைபெற்று, ''அக்கிரமம் உலகில் மிகுதியாகும்.''

காரணம் அதுவரை அது அறியப்படாது.

366 அப்பொழுது சபையானது எடுக்கப்படும். அது எடுக்கப்பட்ட பின்னர், அவன் இப்பொழுதுள்ள அந்திக்கிறிஸ்துவிலிருந்து மாறுகிறான், ஓ, என்னே , “சபை, அந்த மகத்தான சபை”,

அவன் அந்திக்கிறிஸ்துவினின்று மாறி “மிருகமென்று” அழைக்கப்படுகிறான், ஊ-ஊ இதை ஜனங்களுக்குப் புரிய வைக்க எனக்கு எத்தனை ஆவல்!

367 அந்திக்கிறிஸ்து என்பதும், மிருகம் என்பதும் ஒரே ஆவிதான் என்பதை ஞாபகங்கொள்ளுங்கள். அங்கே திரித்துவம் காணப்படுகிறது. ஆம், ஐயா, பிசாசின்

வல்லமை மூன்று கட்டங்களில் வெளிப் படுகின்றது. நிக்கொலாய் ஆவி கிரீடம் சூட்டப்படுவதற்குமுன் அது மனிதனுக்குள் வாசம் செய்ய வேண்டும் என்பது நினை விருக்கட்டும், பாருங்கள்? இப்பொழுது இதைக் கவனியுங்கள்! மூன்று கட்டங்கள் முதலாவது கட்டத்தில் அவன் அந்திக் கிறிஸ்து என்று அழைக்கப்படுகிறான். இரண்டாவது கட்டத்தில் அவன் கள்ளத் தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுகிறான். மூன்றாவது கட்டத்தில் அவன் மிருகம் என்று அழைக்கப்படுகிறான்.

**63-03-18 முதலாம் முத்திரை**

~ ~ ~ ~ ~

359. இப்பொழுது, செல்வத்தின் ஆதிக் கம் அவன் கையில் வந்தவுடன் யூதர்க ளுடன் அவன் செய்த உடன்படிக்கையை அவன் எழுபதாவது வாரத்தின் பாதியின் மத்தியில் (கடைசி மூன்றரை வருஷத்தின்

மத்தியில் - தமிழாக்கியோன்) முறிப்பா னென்று தானியேல் கூறுகிறான். அதன் பின், சகோதரனே, அவன் என்ன செய் வான். அச்சமயம், உலகத்தின் செல்வம னைத்தும் அவன் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுள்ளதால், உலகிலுள்ள வாணிப மெல்லாம் அவன் கைக்குள் இருக்கும். இந்த சமயத்தில்தான், இரண்டு தீர்க்கதரிசி கள் காட்சியில் எழும்பி 1,44,000 பேரை அழைப்பார்கள். அதன்பின்பு என்ன நேரிடும்? வெளி. 13-ல் கூறியுள்ள மிருகத் தின் முத்திரை போடப்படும். ஏனெனில் உலக வாணிபமெல்லாம் அவன் அதிகாரத் தில் இருக்கும். அதன்பின் என்ன சம்பவிக் கும்? "அந்த முத்திரையிடப்பட்டவன் அல்லாது வேறு யாரும் விற்கவோ கொள் ளவோ முடியாது." என்ற மிருகத்தின் முத்திரை உள்ளே வரும். (சகோ.பிரான்

ஹாம் பிரசங்க பீடத்தை மூன்று முறை தட்டினார் - ஆசி)

360. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவ் வமயம் சபையானது மகத்தான மூன்றரை வருடகாலம் மகிமையில் சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும். இது நிகழும்போது, நாம் இவ்வுலகில் இருக்க மாட்டோம்.

## 63-03-18 முதலாம் முத்திரை

~~~~~

163 இஸ்ரவேலின் அவபக்திப்பிரியர் கள் இஸ்ரவேலை அழிப்பார்கள் என்பதை ஆமோஸ் அறிந்திருந்தான். அதுபோல, தங்களுக் கென்று நியமித்துக்கொண்ட ஸ்தாபனங்களும், கொள்கைகளும், உபதே சங்களுமே இன்றுள்ள ஜனங்களை அழிக்கப்போகின்றது. பெந்தேகோஸ்தே யினரே! இது உங்களுக்குப் பொருந்தும்.
~~~~~

மிருகத்தின் முத்திரையை தரித்துக் கொள்ளும் அளவிற்கு உன்னை நீயே குருடராக்கிக் கொண்டிருக்கிறாய்; இருந்தாலும் அதை அறியாமலிருக்கிறா. ஒன்று அதில் இருக்கவேண்டும், அல்லது வார்த்தைய்யில் இருக்க வேண்டும். கொஞ்சம் அங்கிருந்து பின்பு வந்துவிடு வேன் என்று நீ ஒருவேளை கூறலாம். ஆனால் அது உன்னால் முடியாது. நீ ஏற்கனவே அதற்குள் இருக்கிறாய். மிருகத்தின் முத்திரை உன் மேல் விழுந்துவிட்டது. ஏசா மனங்கசந்து அழுதும், மனந்திரும்புதலைக் காணாமற்போனான், அல்விதமாகத்தான் நீயும். இப்பொழுது தருணம் உண்டாயிருக்கின்றது. அந்த இடத்தை விட்டு புறப்படு.

## 63-01-19 ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை

~~~~~
~~~~~

வேதவசனத்தில் கூறப்பட்டுள்ளவைகளும் - இதை அவைகளில் ஒன்று - காரியமும் இங்கே நிறைவேற வேண்டும். ஆனால் அத்தகைய கட்டுபாடு உண்டாகும் முன்பு (மிருகத்தின் முத்திரையிடுதல்) மணவாட்டி சபையை எடுக்கத்தக்கதாக தேவன் விதையை விதைக்க வேண்டியவராயிருக்கிறார். இப்பொழுது புரிந்து கொண்டீர்களா? விதையானது விதைக்கப் பட வேண்டும். ஸ்தாபன வித்து... இந்த ஸ்தாபனங்கள் மிருகத்திற்கு (ரோம சபை) ஒரு சொரூபத்தை உண்டாக்க வேண்டும். ஆனாலும் அவைகளின் மத்தியில் ஒரு உண்மையான மணவாட்டி இருந்தாக வேண்டும்.

**62-03-18E உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து #2**

~ ~ ~ ~ ~

303. என்றாவது ஒரு நாள் கிறிஸ்துவின் உண்மையான மணவாட்டி தேவ வார்த்தையைப் பிரசங்கிப்பதற்கு தடை செய்யப்படுவாள். (நீங்கள் குறித்துக் கொள்ள விரும்பினால்,) வெளி: 13:16ல் வேதம் அதைக் குறித்து தீர்க்கதரிசனமாயுரைக்கிறது. ஸ்தாபனங்கள் மணவாட்டியை தடை செய்யும்; அல்லது, “மிருகத்தின் முத்திரையை” அணிந்துகொள்ள வற்புறுத்தும். அப்பொழுது தான் ஆட்டுகுட்டியானவர் மணவாட்டியை எடுத்துக் கொள்வார். பின்பு வேசியை நியாயந் தீர்ப்பார்.

## 62-03-18E உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து #2

~~~~~

10. சரி. இந்த பெந்தெகோஸ்தே கூட்டமும், சுவிசேஷக் கூட்டமும் ஒன்றாக ஊழியம் செய்து ஒரு ஸ்தாபனமாக
~~~~~

இணைந்து, பின்பு உலக ஐக்கிய ஆலோசனை சபையில் ஒரு அங்கமாக மாறும் என்பதனை நான் முன்னறிவிக்கிறேன். ஏற்கனவே அவர்கள் அவ்விதமாயிருக்கின்றனர். அவர்கள் மூலமாக மற்ற சபைகளுக்கு ஒரு ஆக்கப்பூர்வமான தடையுண்டாக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட அச்சபைகளைச் (union of churches) சார்ந்தது மட்டுமே நிலைத்திருக்கத்தக்கதான நிலைமை ஒன்று வருகிறதாயிருக்கிறது. ரோமமார்க்கமான மிருகத்தின் முத்திரையைப் பெற்று கொள்ளாதவர்கள் வாங்கவோ, விற்கவோ கூடாத அளவிற்கு ஒருதடை வரப்போகிறது என்று வேதம் கூறுகிறது. மிருகத்திற்கு ஒரு சொரூபம் கொடுக்கப்பட்டது. அதுதான் கத்தோலிக்க மார்க்கத்திற்கு விரோதமாய் பிரிந்த பிராடெஸ்டெண்ட் மார்க்கமாகும். இந்த சொரூபத்திற்கு (ஸ்தாபன சபைகள் ---

தமிழாக்கியோன்) பேசத்தக்கதாக ஆவியையும் சத்துவத்தையும் கொடுக்க மிருகம் வல்லமையுள்ளதாயிருந்தது. ஸ்தாபன சபைகளாக ஐக்கிய ஆலோசனை சபையில் அவர்கள் சேரும்போது நடைபெறப் போவது அதுவே.

11. இங்கு அநேக வாலிபர்கள் இருக்கின்றீர்கள். ஒருவேளை இன்று பகல் அல்லது அடுத்த வருடம் இயேசு வரக் கூடும். அவர் எப்பொழுது வருவார் என்று நான் அறியாதவனாயிருக்கிறேன். ஆனால் ஒன்றை ஞாபகம் கொள்ளுங்கள்; அவர் வருவதை நான் பார்க்க ஜீவித்திராவிட்டால், (அவ்விதம் அவர் வருவதைக் காண நான் ஜீவித்திருப்பேன் என்று நம்புகிறேன்) இந்த என்னுடைய வார்த்தைகள் உங்கள் செவிகளையும் இருதயங்களையும் விட்டு அகலாதிருப்பதாக. பாருங்கள்? நான் இவைகளை

கர்த்தருடைய நாமத்தினால் கூறுகிறேன். ஒரு சங்கம் (union) போன்று அது அமைந்து பின்பு ஆக்கப்பூர்வமான ஒரு தடையையுண்டாக்கும்; அவ்விதமாகவே ஸ்தாபனங்கள் முதிர்ச்சியடையும் என்று நான் என் இதயப்பூர்வமாக விசுவாசிக் கிறேன். இங்கு நம்மிடையேயுள்ள சபை கள் எல்லாம் மூடப்பட்டு, ஐக்கிய ஆலோ சனைச் சங்கத்தின் அனுமதி அல்லது சான் றிதழ் இல்லாமல் பேசவோ, ஆராதனை நடத்தவோ முடியாத ஒரு நிலைமையுண் டாகும்.

12. இப்பொழுதே, அவ்விதமான காரியங்களும் கட்டுப்பாடுகளும் ஸ்தாபன சபைகளில் உண்டாயிருக்கின்றன. ஆம் ஐயா, அதை நீங்கள் பெற்று கொள்வீர்கள் என்பதற்கு அறிகுறியாக அவை அங்கே யுண்டாயிருக்கின்றன. அதிலேதான் அது முடிவடையும். கிறிஸ்துவின் ஒரு ஊழியக்

காரனாக, நான் பெற்ற வார்த்தையின் வெளிப்பாட்டின் புரிந்துகொள்ளுதல் மூல மாக ஸ்தாபனங்கள் அவ்விதமான கட்டுப் பாட்டைக் கொண்டு வரும் என்று நான் முன் அறிவிக்கிறேன். எல்லா அடையா ளங்களும் முடிவை சுட்டிக் காட்டுகின்றன. அதைக் குறித்து சற்று முன்புதான் நான் பிரசங்கித்தேன்.

13. புத்தியில்லாத கன்னிகைகளும் கூட எண்ணெய்க்காக கதற ஆரம்பித்து விட்டார் கள். அவள் ஒரு கன்னிகையாயிருந்தாள் என்பதைக் கவனம் கொள்ளுங்கள். அவள் அவ்விதம் ஒரு கன்னிகையானால் அவ ளும் ஒரு சபையாயிருக்கிறாள். பாருங்கள். அதைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷம் 17ம் அதிகாரத்தில் கூறப் பட்டதை சற்று பின்பு பார்ப்போம், அவள் ஒரு கன்னிகையானால் அவள் சபையா கும். சபை என்னப்பட்டது ஒரு கன்னிகை

யாகும். பவுலும், “நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரு புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால்," என்று கூறினான். வெளிப்படுத்தின விசேஷத்தில் 17ம் அதிகாரத்தில் கூறப்பட்ட வேசியும் ஒரு சபையாகும். யோவான் அவள் அழகைக் கண்டு ஆச்சரியப்பட்டான். ஆனாலும் அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கிறதை அவன் கண்டான். அவளால் கொல்லப்பட்ட பரிசுத்தவான்கள். இது உண்மை.

## 62-03-18E உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து #2

~~~~~

41) இப்பொழுது நமக்கு முன்பாக ஒரு மகத்தான சம்பவத்தை நாம் பெற்றிருக்கி
~~~~~

றோம். ஆனால் அதை சரியானவிதமாக அணுக நேரம் போதாது. நாளை இரவு அல்லது மற்றொரு நாள் இரவில் கர்த்தருக்குச் சித்தமானால் என்னால் கூடுமானால், நான் பழைய ஏற்பாட்டிலிருந்து தீர்க்கதரிசிகளைக் குறித்த விபரங்களை பிரசங்கிப்பேன். அவருக்கு சித்தமானால் வருகிற வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமை இரவு “மிருகத்தின் முத்திரை” மற்றும் "தேவனின் முத்திரை" என்பவற்றின் பேரில் பேசும்படி தேவன் என்னுடன் இடைபடுவதுபோல் தெரிகிறது. அது சபையானது சரியாக இக்காலத்தில் அறிந்துகொள்ளவேண்டிய காரியம் என்று நான் நினைக்கிறேன்.

**61-04-26 தீர்க்கதரிசி மிகாயா**

~~~~~

198. சாத்தானின் புத்திரர்கள் இந்தக் கடைசி நாட்களில் முத்திரையிடப்படுவார்
~~~~~

கள். இப்பொழுது ஒரு நேரம் உண்டு, அதாவது வேதம் அதைக் குறித்து உரைத் துள்ளது. அதாவது தேவனுடைய முத்திரை யைப் பெற்றுக்கொள்ளாத எல்லோருமே மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக் கொண்டனர். மிருகத்தின் முத்திரை அவிசுவாசமாயிருக்கிறது என்பதை நாம் அறிவோம். முதல் முறையாக......... “மிருகத்தின் முத்திரை எங்கேத் துவங் கினது என்று நீங்கள் கூறுவீர்களா? ஏதேன் தோட்டத்தில். மிருகத்தின் முத்திரையும், தேவனுடைய முத்திரையும் ஏதேன் தோட் டத்தில் கையாளப்பட்டது. சரியாக, அது ஈஸ்டரினூடாக, ஆபேலின் மரணத்திற்காக சேத்தை பிறப்பித்ததினூடாக கையாளப் பட்டது.” அது உண்மை, கவனியுங்கள்.

**61-04-02 உண்மையான ஈஸ்டர் முத்திரை**

~~~~~
~~~~~

102. ஒரு நாள், பாவம் ஜனங்களைக் கொன்று, தேவன் தமது ஜனங்களை முழங்காற்படியிடச் செய்த பிறகு.. யேசபேல் எல்லாவற்றையும் அடியோடு ஒழித்தாள், அவள் அதை மறுபடியும் செய்வாள்! அது தேவனுடைய பரிசுத்த வேதாகமம் உரைக் கிறதாவது. "அவள் அதை மறுபடியும் செய்வாள்" இப்பொழுது அவள் பெயரளவில் தலைவனின் பின்னால் சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டு, தன் விருப்பப்படி அதை திரித்துக் கொண்டிருக் கிறாள், யாரும் அவளை தடுத்து நிறுத்த மாட்டார்கள், நிச்சயமாக இப்பொழுது யாரும் அவளை தடுத்து நிறுத்தப் போவதில்லை. ஏனெனில் மத சம்பந்தமான வட்டாரத்தில் அவர்களுக்கு எது கிடைக்கவில்லையோ, அதை அரசியலில் நுழைவதினால் பெற்றுக் கொள்கின்றர். அவர்கள் அங்கு அதை செய்து விட்டனர். நான்

இங்கு நின்று கொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாக அந்த அரசியல் அவர்களை மிருகத்தின் முத்தி ரைக்கு அழைத்து செல்லும். பாருங்கள்? வேதம் அவ்வாறு உரைத்துள்ளது.

**61-03-19 யேசபேல் மார்க்கம்**

~ ~ ~ ~ ~

ஓ, தேவனுடைய முத்தியையானது என்னவாயிருக்கிறது? பரிசுத்த ஆவி. மிருகத்தின் முத்திரையானது என்னவா யிருக்கிறது? பரிசுத்த ஆவியை புறக்கணித் தலேயாகும். அந்த இரு பிரிவினர், அவர்கள் ஒருவர் காண்கின்றனர்... நல்லது, அவர்கள் ... பூமியில் எத்தனை பேர் அதைப் பெற்றுக் கொள்ளாமலிருந்தனர்?“ முத்தரிக்கப்படாதவர் யாவருமே மிருகத் தின் முத்திரையைப் பெற்றுக் கொண்ட னர்.'' எத்தனை பேர்கள் தேவனுடைய முத்திரையைப் பெற்றுக்கொள்ள

வில்லையோ, அவர்கள் யாவரும் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொண்டனர்.

தேவனுடைய முத்திரையானது பரிசுத்த ஆவியாகும். வேதம் அவ்வாறு கூறியுள்ளது. அதைக் குறித்து வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும், அது தேவனுடைய அடையாளம், தேவனுடைய முத்திரை என்று கூறுகிறது. அம்முத்திரையை பெற்றிராதவர்கள் யாவரும், அதை புறக்கணித்தவர்கள் ஆவர். அதை அவர்கள் எவ்வாறு புறக்கணித்துள்ளனர்? அதற்கு செவிகொடுக்க மறுப்பதின் மூலமே. அப்படித்தானே?

**60-12-11M பத்து கன்னிகைகளும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும்**

~ ~ ~ ~ ~

பாருங்கள், எக்காளமானது முழங்கியது. அதினால் அவன் விடுதலை பெற்றுப்

போக முடியும், அது தேவனுடைய கிருபையாயிருக்கிறது. அதுதானே யூபிலி வருடமாயிருக்கிறது. பூர்த்தியடைந்ததாக இருக்கிறது. பாவத்தின் நாளானது முடிவடைந்து விட்டது, சகோதரனே. பாவத்திற்கு ஊழியம் செய்யும் ஒவ்வொருவருக்கும் நான் கூறுகிறேன்; (அவர்கள் ஒலிநாடாவில் கேட்கிறவர்களாயினும் சரி, பார்க்கத்தக்கதாக அமர்ந்திருக்கும் சபையாரானாலும் சரி) பாவத்திற்கு ஊழியம் செய்யும் ஒவ்வொரு வருக்கும் கூறுகிறேன், பாவத்தின் நாளானது முடிவடைந்து விட்டது. இயேசு மரித்தார், எனவே நீங்கள் இனி பாவத்திற்கு ஊழியம் செய்ய வேண்டியதில்லை. மதக்கோட்பாடுகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் முன்பாக நீங்கள் இனி தலைவணங்கத் தேவையில்லை.

'குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்காகவே விடுதலையாவீர்கள்.

நீங்கள் விடுதலையாகிச் செல்ல விரும்பி னால், குமாரனுக்குள் விடுதலையாகிச் செல்ல விரும்பினால், எல்லாவற்றினின் றும் உங்களை விடுவித்துக் கொண்டு அவரை சேவியுங்கள். வாருங்கள்.

ஆனால் நீங்கள் அவ்வாறு செய்ய விரும்பாவிடில், அப்பொழுது உங்க ளுடைய மத ஸ்தாபனமானது. உங்களு டைய எஜமானானவன், அல்லது நீங்கள் யாரை சேவித்துக் கொண்டிருக்கிறீர்களோ அவன், இனிமேல் ஒருபோதும் சுவிசேஷ எக்காளத்தைக் கேட்கவே கூடாதபடி, உங்க ளுடைய காதைக்குத்தி அடையாளப் படுத்திவிடுவான். தேவன் எப்பொழு தாவது உங்களிடம் பேசி, "வா, இதுவே தருணம் என்று அழைத்தால், அப்பொழுது, நீங்கள் அவர் பேசுவதைப் புறக்கணித்தால், சத்தியத்திற்கு செவிகொடுக்க முடியாதபடி கடினமடைந்தவராக இருக்கும்படி,

அவனுடைய அடையாளத்தை நீங்கள் பெற்றுக் கொண்டுவிடுவீர்கள். அதுதான் பிசாசின் முத்தியையாகும். அதுவே மிருகத் தின் முத்திரையாகும். அதைப் பார்த்தீர் களா?

மிருகத்தின் முத்திரையானது என்ன செய்கிறது? உங்களை மீண்டும் ரோமா னியக் கொள்கையில், மத ஸ்தாபனக் கோட்பாட்டில் வைத்துவிடுகிறது. இனி உங்களால் வெளியே வந்து சுதந்திர மடைய முடியாது. அதைத்தான் சதா சேவிக்கிறவர்களாயிருப்பீர்கள். அங்கே தான் மிருகத்தின் முத்திரையானது இருக் கிறது. அது கடினமான விஷயமாகத்தான் இருக்கிறது. நண்பர்களே, அது வெட்டு கிறது. ஆனால் அதுதான்... நான் அதற்கு பொறுப்பாளியல்ல... வேதம் என்ன கூறுகிறதோ அதையே நான் கூறுகிறேன்.

## 60-12-11M பத்து கன்னிகைகளும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும்

~~~~~

''... வேலைக்காரன் என் எஜமானையும் நேசிக்கிறேன் என்று மனப்பூர்வமாய்ச் சொல்வானானால்...''

“என்னை இவ்விதச் செயல்களைச் செய்யும்படி செய்யச் செய்யும் பிசாசை நான் நேசிக்கிறேன், அதெல்லாம் சரிதான். நீங்கள் குறுகின எண்ணம் கொண்டவர்க ளாக இருக்கிறீர்கள். நீங்கள் மிகவும் குறுகின புத்தியுள்ளவர்கள். இந்த பெரிய காரியங்களெல்லாம் நமக்கு இருந்தாக வேண்டும். நான் அவைகளை நேசிக்கி றேன். இந்த உலகுக்கு உரிய அக்காரியங் கள் அவைகள். எங்களுக்கு நடனங்கள் உள்ளன. எங்கள் சபையில் சீட்டு விளை யாட்டு உள்ளது. அதைப்போன்ற வேறு காரியங்களும் உள்ளது. இவைகளினால்
~~~~~

எங்களுக்கு நல்ல நேரம் உள்ளது. அங்கே உங்களுக்கு இருக்கிறவைகளைவிட நல்ல காரியங்கள் எங்களுக்கு உள்ளது' என்று கூறுகிறீர்கள்.

சரி, அப்படியே வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு அது சரி.

''... நான் விடுதலை பெற்றுப்போக மனதில்லை...'' நீங்கள் கூறுகிற அந்த ஆவிக்குரிய சுயாதீனத்திற்குள் செல்ல நான் விரும்பவில்லை என்று கூறுகிறீர்கள்.

“அவன் எஜமான் (அது பிசாசாகும்) அவனை நியாயாதிபதிகளிடத்தில் அழைத்துக் கொண்டுபோய், அவனைக் கதவின் அருகேயாவது...

(ஊ! அது என்ன? யார் அந்த கதவு? (சபை யார், “இயேசு கிறிஸ்து என்று கூறுகின்றார் -ஆசி.) ''உனக்கு முன்பாக ஒரு வாசலை நான் வைப்பேன்''.

எப்பொழுது மிருகத்தின் முத்திரை வந்தது? திறந்தவாசலை வைத்திருக்கிற இக்காலத்தில் தான் இது மிருகமானது தன் முத்திரையை இடுதலின் இறுதிக்கட்ட மாகும்.)...

அவனைக் கதவின் அருகேயாவது கதவு நிலையின் அருகேயாவது சேரப் பண்ணி... (அது கல்வாரியைக் குறிக்கிறது. அங்கே எஜமான் அவன் காதைக் கம்பியி னாலே குத்தக்கடவன்; பின்பு அவன் என்றைக்கும் அவனிடத்திலே சேவித்துக் கொண்டிருக்கக்கடவன்.“

''சகோதரன் பிரன்ஹாமே, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

நீங்கள் சுவிசேஷ சத்தியமானது தொனிக்கக் கேட்டும், அதில் நடக்க நீங்கள் மறுத்துவிட்டால், அப்பொழுது தேவன் தாமே உங்கள் காதை, இனி ஒருபோதும்

அதைக் கேட்கக் கூடாதபடி அடையாளப் படுத்திவிடுகிறார். அதனால், நீங்கள் ஜீவனுக்கும் மரணத்திற்கும் இடையே உள்ள கோட்டை தாண்டி விடுகிறீர்கள். அப்பொழுது நீங்கள் உங்கள் ஸ்தாபன சங்கத்தோடு மீதமுள்ள உங்கள் வாழ்நாள் முழுவதும் என்றென்றுமாக சென்று விடுகிறீர்கள். (பிள்ளைகளே, ஒளியில் நடவுங்கள், அதுதான் சரியானது) நீங்கள் அந்த எஜமானை என்றென்றுமாக சேவிப்பீர்கள்.

## 60-12-11M பத்து கன்னிகைகளும், இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் யூதர்களும்

~~~~~

319. ஓ, நான் அவரை நேசிக்கிறேன். நீங்கள் நேசிக்கவில்லையா? ஆம், ஐயா. ஓ, தேவனுடைய முத்திரையானது என்னவாயிருக்கிறது? பரிசுத்த ஆவி. மிருகத்தின் முத்திரையானது என்னவாயிருக்கிறது? பரிசுத்த ஆவியை புறக்கணித்தலேயாகும்.
~~~~~

அந்த இரு பிரிவினர், அவர்கள் ஒருவர் காண்கின்றனர்...

320. நல்லது, அவர்கள்... பூமியில் எத்தனை பேர் அதைப் பெற்றுக் கொள்ளா மலிருந்தனர்? “முத்தரிக்கப்படாதவர் யாவ ருமே மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக் கொண்டனர்.'' எத்தனை பேர்கள் தேவ னுடைய முத்திரையைப் பெற்றுக்கொள்ள வில்லையோ, அவர்கள் யாவரும் மிருகத் தின் முத்திரையைப் பெற்றுக் கொண்டனர். தேவனுடைய முத்திரையானது பரிசுத்த ஆவியாகும். வேதம் அவ்வாறு கூறி யுள்ளது. அதைக் குறித்து வேதத்தில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும், அது தேவனுடைய அடையாளம், தேவனு டைய முத்திரை என்று கூறுகிறது. அம்முத்திரையை பெற்றிராதவர்கள் யாவ ரும், அதை புறக்கணித்தவர்கள் ஆவர். அதை அவர்கள் எவ்வாறு புறக்கணித்

துள்ளனர்? அதற்கு செவி கொடுக்க மறுப்பதின் மூலமே. அப்படித்தானே?

## 60-12-11M பத்து கன்னிகைகள்

~~~~~

310. ''சகோதரன் பிரன்ஹாமே, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?'' நீங்கள் சுவிசேஷ சத்தியமானது தொனிக்கக் கேட்டும், அதில் நடக்க நீங்கள் மறுத்துவிட்டால், அப்பொழுது தேவன் தாமே உங்கள் காதை, இனி ஒருபோதும் அதைக் கேட்கக் கூடாதபடி அடையாளப்படுத்திவிடுகிறார். அதனால், நீங்கள் ஜீவனுக்கும் மரணத்திற்கும் இடையே உள்ள கோட்டை தாண்டிவிடுகிறீர்கள். அப்பொழுது நீங்கள் உங்கள் ஸ்தாபன சங்கத்தோடு மீதமுள்ள உங்கள் வாழ்நாள் முழுவதும் என்றென்றுமாக சென்றுவிடுகிறீர்கள். (பிள்ளைகளே, ஒளியில் நடவுங்கள், அதுதான் சரியானது)
~~~~~

நீங்கள் அந்த எஜமானை என்றென்றுமாக சேவிப்பீர்கள்.

311. உங்களுக்கு விருப்பமில்லை... பாருங்கள், எக்காளமானது முழங்கியது. அதினால் அவன் விடுதலை பெற்றுப்போக முடியும், அது தேவனுடைய கிருபை யாயிருக்கிறது. அதுதானே யூபிலி வருட மாயிருக்கிறது. பூர்த்தியடைந்ததாக இருக்கி றது. பாவத்தின் நாளானது முடிவடைந்து விட்டது, சகோதரனே. பாவத்திற்கு ஊழி யம் செய்யும் ஒவ்வொருவருக்கும் நான் கூறுகிறேன்; (அவர்கள் ஒலிநாடாவில் கேட்கிறவர்களாயினும் சரி, பார்க்கத்தக்க தாக அமர்ந்திருக்கும் சபையாரானாலும் சரி) பாவத்திற்கு ஊழியம் செய்யும் ஒவ்வொருவருக்கும் கூறுகிறேன், பாவத் தின் நாளானது முடிவடைந்துவிட்டது. இயேசு மரித்தார், எனவே நீங்கள் இனி பாவத்திற்கு ஊழியம் செய்ய வேண்டிய

தில்லை. மதக்கோட்பாடுகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் முன்பாக நீங்கள் இனி தலைவணங்கத்தேவையில்லை. “குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்''. நீங்கள் விடுதலையாகிச் செல்ல விரும்பினால், குமாரனுக்குள் விடுதலையாகிச் செல்ல விரும்பினால், எல்லாவற்றினின்றும் உங்களை விடுவித்துக் கொண்டு அவரை சேவியுங்கள். வாருங்கள். ஆமென்.

312. ஆனால் நீங்கள் அவ்வாறு செய்ய விரும்பாவிடில், அப்பொழுது உங்களுடைய மத ஸ்தாபனமானது. உங்களுடைய எஜமானானவன், அல்லது நீங்கள் யாரை சேவித்துக்கொண்டிருக்கிறீர்களோ அவன், இனிமேல் ஒருபோதும் சுவிசேஷ எக்காளத்தைக் கேட்கவே கூடாதபடி, உங்களுடைய காதைக் குத்தி அடையாளப்படுத்தி விடுவான். தேவன் எப்பொழு

தாவது உங்களிடம் பேசி, “வா, இதுவே தருணம்'' என்று அழைத்தால், அப்பொழுது, நீங்கள் அவர் பேசுவதைப் புறக்கணித்தால், சத்தியத்திற்கு செவிகொடுக்க முடியாதபடி கடினமடைந்தவராக இருக்கும்படி, அவனுடைய அடையாளத்தை நீங்கள் பெற்றுக் கொண்டு விடுவீர்கள். அதுதான் பிசாசின் முத்திரையாகும். அதுவே மிருகத்தின் முத்திரையாகும். அதைப் பார்த்தீர்களா? மிருகத்தின் முத்திரையானது என்ன செய்கிறது? உங்களை மீண்டும் ரோமானியக் கொள்கையில், மதஸ்தாபனக் கோட்பாட்டில் வைத்து விடுகிறது. இனி உங்களால் வெளியே வந்து சுதந்திரமடைய முடியாது. அதைத்தான் சதா சேவிக்கிறவர்களாயிருப்பீர்கள். அங்கேதான் மிருகத்தின் முத்திரையானது இருக்கிறது.

313. அது கடினமான விஷயமாகத் தான் இருக்கிறது. நண்பர்களே, அது வெட்டுகிறது. ஆனால் அதுதான்.... நான் அதற்கு பொறுப்பாளியல்ல... வேதம் என்ன கூறுகிறதோ அதையே நான் கூறு கிறேன்.

**60-12-11M பத்து கன்னிகைகள்**

~~~~~

255. சபையானது நீங்கள் இந்த ஸ்தாபன அமைப்புக்குள் பிரவேசிக்கப் போகும் அந்த இடத்திற்கு வரப்போகிறது. நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ளப் போகி றீர்கள், சகோதரனே. அப்படித் தான். நீங்கள் ஸ்தாபனத்தை அமைத்துக் கொண்டு, மிருகத்தின் முத்திரையை எடுத்துக்கொண்டாக வேண்டும் என்ற நிலை வருகிறது. ஒன்று நீங்கள் ஒரு ஸ்தாபனத்தை அமைத்துக்கொண்டாக வேண்டும் என்ற நிலையோ, அல்லது
~~~~~

ஸ்தாபனத்தில் சேர்ந்துவிட வேண்டும் என்ற நிலை வருகிறது. அதுதான் மிருகத்தின் முத்திரையைக் கொண்டு வரப்போகிறது. இதைச் செய்யாவிட்டால், அது ஒரு பகிஷ்கரிப்பாக ஆகிவிடும். பாருங்கள்?

**60-12-10 பிலதெல்பியா சபையின் காலம்**

~~~~~

146. இந்த பரிசுத்த ஆவி கடைசி நாட்களில் தேவனுடைய முத்திரையாயிருக்கும் என்று இயேசு முன்னுரைத்துள்ளார். மிருகத்தின் முத்திரை எது? அது தேவனுடைய முத்திரையை புறக்கணித்தலே. தேவனுடைய முத்திரையைப் பெற்றிராத அனைவரும் மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக் கொள்வார்கள். இவை இரண்டும் ஆவியுடன் சம்பந்தப்பட்ட குறிகளானால் ஒன்று தேவனுடைய உண்மையான குறி, மற்றது விசுவாச
~~~~~

துரோகத்தினால் (apostasy) கிடைப்பது. இது உங்களுக்குப் புரிகிறதா?

**60-02-21 தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதை அடையாளம் கண்டு கொண்டு அதன்படி நடத்தல்**

~ ~ ~ ~ ~

126. மிருகத்தின் முத்திரையானது இப்பொழுது இன்றைக்கு செயலில் உள்ளது. மேலும் - பரிசுத்த ஆவி தான் தேவனுடைய முத்திரையாகும். அதைப் புறக்கணிப்பதென்பது மிருகத்தின் முத்திரையாகும். நீ கட்டாயமாக பெற்றுக் கொள்ள வேண்டிய பரிசுத்த ஆவியை நீ கண்டு, அதை ஏற்றுக் கொள்ளாமல் போனால், தானாகவே நீ அந்த மிருகத்தின் முத்திரையை எடுத்துக் கொள்கிறாய், ஏனெனில் இரண்டு சாரார் மாத்திரமே இருக்க முடியும்: தேவனுடைய முத்தி ரையை கொண்டிராத எல்லாரும் மிருகத்

தின் முத்திரையை பெற்றிருந்தனர். ஆகவே தேவனுடைய முத்திரை யைப் பெற பரிசுத்த ஆவியைப் பெறத்தான் வேண்டும். அதை பெற வேண்டும். இதோ இதுதான் முழு காரியமும். அது முற்றிலு மாகச் சரியே.

## 59-06-28E கேள்விகளும் பதில்களும் COD #8 AND #9

~~~~~

165. "நீங்கள் மிருகத்தின் முத்திரை யைக் குறித்து என்ன?" என்று கேட்கலாம். அது உபத்திரவத்தில் வரவேண்டியதாய் இருக்கிறது. அப்பொழுது சபையானது சென்றுவிட்டிருக்கும். இந்த முத்திரையை பெற்றுக் கொள்ளர்தீர்கள். இவைகள் முத்திரையிடப்பட்டிருக்கின்றன, பாருங் கள் இப்பொழுதே முத்திரையிடுதல் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. முத்திரையிடு தல் எவ்விதமான முத்திரை என்பதை
~~~~~

அடையாளம் காட்டிக் கொண்டிருக்கின்றது. தேவனண்டை ஓடுங்கள், அவரண்டை விரைந்து ஓடுங்கள்.

## 59-03-01M வாசல் இடுக்கமாய் உள்ளது

~~~~~

100. இந்நாட்களொன்றில் இதைப் போன்ற இந்த ஸ்தாபனப் பாகுபாடற்றக் குழுவிலிருந்து உதைத்துத் தள்ளப்படுவீர்கள். அப்பொழுது நீங்கள் ஒரு ஸ்தாபனத்தைச் சார்ந்துகொள்ள வேண்டியதான ஒரு நேரம் வரும், இல்லையென்றால் உங்களால் ஆராதிக்க முடியாது. நீங்கள் அறிந்துள்ளபடி அது உண்டாகும் என்று வேதம் கூறுகிறது. அவர்கள் இப்பொழுது உங்களைப் பரியாசம் செய்வார்கள். ஆனால் அங்கே ஒரு புறக்கணிப்பு உண்டாயிருக்கும் நேரம் ஒன்று உண்டு, ஏனென்றால் மிருகத்தின் முத்திரை வரவேண்டும். நீங்கள் ஒன்று சபைகளின் ஆலோசனை
~~~~~

சங்கத்தை சார்ந்து கொள்ள வேண்டும். அது ரோமாபுரியில் உள்ள மிருகத்தைப் போன்றிருக்கும், இல்லையென்றால் நீங்கள் ஆராதிக்கவே முடியாது. அதைத் தான் வேதவாக்கியம் கூறுகிறது. அப்பொ ழுதுதான் நீங்கள் ஏசாயா கதறினதுபோலக் கதற வேண்டியதாயிருக்கும்.

## 58-10-05M அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுங்கள்

~~~~~

116. நீங்கள் நடுநிலை வகிக்க முடி யாது. பரிசுத்த ஆவியினாலே முத்திரிக்கப் படாத யாவரும் மிருகத்தின் முத்திரையை தரித்துக் கொள்வார்களென்று வேதம் சொல்லுகிறது. மிருகத்தின் முத்திரை என்பது என்ன? அவிசுவாசம். உங்களுக்கு தெரியாதா உங்களுடையது என்ன வென்று........

## 58-01-28 ஐக்கியத்தின் ஒருமைப்பாடு
~~~~~

~ ~ ~ ~ ~

415 பரலோகத்தைக் குறித்த திரித்துவத்தைப் போன்றே: பிதா, குமாரன், பரிசுத்த ஆவியைப் போன்றே; மிருகத்தைக் குறித்த திரித்துவத்தைப்போல; கள்ளத்தீர்க்கதரிசி, மிருகம், மிருகத்தின் முத்திரை. அவை யாவும், நினைவிருக்கட்டும், அவை யாவும் திரித்துவத்தில் உள்ளன. திரித்துவம் ஒன்றாகி, பரிபூரணப்பட்டது. ஒன்றாய் பரிபூரணப்படுத்தப்பட்டது. நீங்கள் மூன்றில் ஒன்றாய் பரிபூரணப்படுத்தப்படுகிறீர்கள்: ஆத்துமா, சரீரம், ஆவி; தண்ணீர், இரத்தம், மற்றும் நரம்புகள். பாருங்கள், நீங்கள் என்னவாயிருந்திருந்தாலும், பரிபூரணமாக்கப்பட்ட ஒன்றாக ஆவதற்கு உங்களுக்கு மூன்று தேவைப்படுகிறது. ஒரு மும்முனை கொண்ட கண்ணாடி துண்டை எடுத்து, அதன் மேல் சூரிய வெளிச்சம் படும்படிச் செய்தால்,

அப்பொழுது நீங்கள் ஒரு பரிபூரணமான வானவில்லைப் பெற்றுக் கொள்வீர்கள். பாருங்கள், ஒவ்வொரு காரியமும், நீங்கள் ஒன்றை பரிபூரணப்படுத்த மூன்றினை உடையவர்களாயிருக்க வேண்டும்.

**57-10-02 எபிரெயர் நிருபத்தின் பேரிலான COD #6**

~ ~ ~ ~ ~

இதோ, தேவனுடைய வார்த்தையின் படி பரிசுத்த ஆவியானவர் உரைக்கிறதா வது, ஓர் நாளிலே, அமெரிக்கா முழுவது மாக தேவனை நிராகரித்து, வெளிப்படுத் தல்13- ம் அதிகாரத்தின்படி மிருகத்தின் முத்திரையை ஏற்றுக்கொள்ளும். நாம் சரியாக அந்த நிலைக்குத் தான் போய்க் கொண்டிருக்கிறோம். தேவன் எந்த ஒரு தேசத்தையும்...

**54-10-03E யூபிலி ஆண்டு**

~ ~ ~ ~ ~

அந்தப்படியே பரிசுத்த ஆவியினாலே முத்திரிக்கப்படாத யாவும் மிருகத்தின் முத்திரையை எடுத்துக்கொள்கிறது. பரிசுத்த ஆவியை தள்ளிப்போடுவதே விசுவாச துரோகம் என்று குறிக்கப்படு கிறது. அதுவே மிருகத்தின் முத்திரை. நான் சொல்வது புரிகிறதா?

**54-10-03E யூபிலி ஆண்டு**

~~~~~

27. **சகோதரன் பிரன்ஹாம், ''மிருகத்தின் முத்திரையை'' குறித்து பேசுகையில், அவர்கள் உங்கள் தலையில் ஒரு இலக்கத்தை பச்சை குத்துவார்களா அல்லது உங்கள் கையில் ஏதோ ஒன்று பச்சை குத்துவார்கள் என்ற நீங்கள் நம்புகிறீர்களா?** இல்லை ஐயா! அதை நீங்கள் எதிர்பார்க்காதீர்கள்.

72. அது ஒரு புறக்கணிப்பாக இருக்கும்! நிச்சயமாக! ''எந்த ஒரு
~~~~~

மனிதனும் சபைகளின் சங்கத்தை சேர்ந்தவனாக இருந்தாலொழிய அவனால் வாங்கவோ அல்லது விற்கவோ முடியாது.'' அது உண்மை. இப்பொழுது அது ஒரு ஐக்கியம் போல வந்து, காரியத்தை ஐக்கியப்படுத்தி, அதை ஒரு ஐக்கியப் படுத்தப்பட்ட மார்க்கமாக கொண்டு வரும். என்னுடைய வார்த்தையை குறித்துக் கொள்ளுங்கள், அது நீண்ட தொலைவில் இல்லை! அவள் அங்கே சற்று அருகாமையில் இருக்கின்றாள் என்பதை நீங்கள் காண்பீர்கள்.

73. இந்த காரியங்கள் எல்லாம் உங்களுக்கு தெரியாதிருக்கிற காரணம் என்னவெனில், எல்லா நேரத்திலும் நீங்கள் இங்கேயே இருக்கின்றீர்கள். கத்தோலிக்கம் ஆதிக்கம் செலுத்தும் இந்த நாடுகளுக்கு, ஒரு தடவை என்னை பின் தொடர்ந்து வாருங்கள், என்ன நடக்கிறதென்று பாருங்

கள். சகோதரனே, எதை செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது என்ற எல்லாவற்றை யுமே அவர்களுக்கு அவர்கள் கூறுகின்ற னர்.

## 54-05-15 கேள்விகளும் பதில்களும் COD #4

~~~~~

24. இப்பொழுது, தேவனுடைய ஒத்தா சையைக் கொண்டு முதலாவதிற்கு நான் பதிலளிப்பேன். நான் கூறினேன், கத்தோ லிக்க சபை... கடந்த இரவு நாம் பார்த் தோம், மிருகத்தின் முத்திரையானது ரோமி லிருந்து வரவேண்டுமென்று நாம் பார்த் தோம். அது சரியா? அது ரோமாபுரியைத் தவிர வேறு எந்த தேசத்திலிருந்தும் வராது. அங்கேதான் அது சிங்காசனமிட்டிருக் கிறது, அங்கே தான் அது ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. கத்தோலிக்க ஜனங்களுக் கெதிராகவோ அல்லது யாருக்கும் எதிரா கவோ என்னிடம் ஒன்றுமில்லை என்று
~~~~~

நான் கூறியுள்ளேன். நாமெல்லாரும் பரலோகத்திற்கு செல்ல முயன்று கொண் டிருக்கின்ற மானிடர்கள்.

## 54-05-15 கேள்விகளும் பதில்களும் COD #4

~~~~~

221. இந்த N .R ,A வைக் குறித்து, நான் "அது மிருகத்தின் முத்திரை அல்ல, நிச்சயமாக அல்ல. அது ஒரு மதச்சம்பந்த மான புறக் கணிப்பு; அது அதுவல்ல'' என்றேன். ''இதுதான் துன்பத்தின் ஆரம்பம் என்பதை மக்கள் அறிந்து, ஆயத்தம் அடைவதற்காக இது முன்னோடியாக உள்ளது, இங்கேயிருந்து தான் நாம் ஆரம்பிக்க வேண்டும். சரியாக இங்கே யிருந்து தான் காலமானது முடிய ஆரம் பிக்கும் நேரம் ஆகும். இப்பொழுது கவனி யுங்கள், அந்த நேரம் அங்கே உள்ளது” என்றேன்.
~~~~~

**54-01-03M கேள்விகளும் பதில்களும் COD #2**

~~~~~

213. இங்கு அமர்ந்துள்ள ஒரு வர்த்தகர் என்னிடம், "இதே கலிபோர்னி யாவில், தொழிலாளர் சங்கம் என்ன செய்ய வேண்டுமென்று சபை கட்டளை யிடும் நிலைமை வந்துள்ளது'' என்றார். பாருங்கள், மறுபடியும் சபையும் அரசாங் கமும் ஒன்றாக இணைகின்றன. அது இப்பொழுது உங்கள் மேல் உள்ளது. நீங்கள் அதன் மத்தியில் இருக்கின்றீர்கள். உங்களை அறியாமலே நீங்கள் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்கின்றீர்கள்.

**65-12-07 வழி நடத்தும் தன்மை**

~~~~~

# மிருகத்தின் முத்திரை 2

(இது தீர்க்கதரிசி பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து, '**மிருகத்தின் முத்திரை**' என்ற தலைப்பில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிய, கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளை முழுமையாக வாசிக்கவும்.)



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து